**ஒதுக்கீட்டுத் தலைப்பு - 277 மாவட்டச் செயலகம், மொனராகலை**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2012 ஆம் ஆண்டு**

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(அ) பிரதேச நிர்வாகத்தைச் சுழற்சியுடனும் சக்திமிக்கதாகவும் பேணுவதற்காக தேசிய மட்டத்திலான நிறுவனங்களுடன் ஒருங்கிணைதலும் பணிகளை இலகுபடுத்தலும்

(ஆ) வெளிப்படையான வினைத்திறன் மற்றும் பயனுள்ள அரச சேவையினூடாக மாவட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

(இ) மாவட்ட அரச ஊழியர்கள் பொது மக்களது தேவைகள் தொடர்பாக பணிவுடன் செயலாற்றுவதற்கு வெற்றிகரமான எண்ணங்களை வழங்குதல்

(ஈ) முறையாகவும் வினைத்திறனுடனும் நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு பொருத்தமான விதத்தில் மாவட்டத்தின் மனிதவள, பௌதீக வளங்களைச் செயற்படுத்தலும் முகாமைத்துவமிடலும்

(உ) மாவட்டத்தின் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படவேண்டிய சகல வருவாய்களையும் குறித்த நேரத்தில் முறையாகச் சேகரித்தல்

(ஊ) அரச சார்பற்ற நிறுவனங்களது நடவடிக்கைகள், வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றின் வாயிலாக மாவட்டத்திற்கு பெருமளவில் கிடைக்கும் வளங்களை மேலும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு உத்தரவாதமளித்தல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) பிபில
(ஆ) மெதகம
(இ) மடுல்ல
(ஈ) சியம்பலாண்டுவ
(உ) படல்கும்புற
(ஊ) மொனராகலை
(எ) புத்தள
(ஏ) வெள்ளவாய
(ஐ) தனமல்வில
(ஒ) செவனகல
(ஓ) கதிர்காமம்

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 08 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப்பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பந்திகளின் பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஏடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

(i) மோட்டார் வாகனப் பரிசோதனை அறிக்கை, வருகைச் சான்றிதழ் முதலிய தேவையான சான்றிதழ்கள் இல்லாமையின் காரணமாக கதிர்காமம் பிரதேச செயலகத்தில் ரூபா 51,778 கூட்டுமொத்த தொகைக்குரிய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

(ii) மாவட்ட செயலகத்திற்கு முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 7 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அக்கணக்காய்வு ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 52,539,628 ஆகும்.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டில் மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 499,595,492 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியளவில் அதில் ரூபா 489,988,794 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்பு ரூபா 9,606,698 ஆக இருந்ததுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 2 சதவீதத்தைக் கொண்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய நிதி ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவருபவை | 271,300,000 | 370,195,492 | 1,110,698 | 0.3 |
| மூலதனம் | 94,400,000 | 129,400,000 | 8,496,000 | 6.5 |
| மொத்தம் | 365,700,000 | 499,595,492 | 9,606,698 | |

(ii) பாதீட்டு முரண்

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக மதிப்பிடப்பட்ட 277-1-1-0-1-1506 ஆம் இலக்க செலவு விடயத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்து 06 உத்தியோகத்தர்களுக்காக 2013 ஆம் ஆண்டிற்கு அரசாங்க ஆதன கடன் வட்டியாக ரூபா 345,741 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதிப் பிரமாணம் 94 இற்கு முரணாக 01 மற்றும் 02 ஆம் செயற்திட்டத்தில் 08 செலவு விடயங்களுக்காக வருடாந்த மொத்த தேறிய நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 827,709 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக 21 அமைச்சுக்கள் மற்றும் 16 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 1,744,312,888 மற்றும் ரூபா 515,509,607 ஆக ரூபா 2,259,822,495 கூட்டு மொத்த தொகையான நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அதில் முறையே ரூபா 1,571,941,211 மற்றும் ரூபா 470,796,434 ஆக ரூபா 2,042,737,645 கூட்டு மொத்த தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 217,084,850 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

(அ) பிபிலை பிரதேச செயலகம்

(i) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குள் நலன்பெறுனர்களுக்கு இடையில் பகிர்தளிப்பதற்காக ரூபா 1,377,000 தொகையான பழ மரங்கள், சிறு ஏற்றுமதி பயிர் நாற்றுக்கள், தென்னங் கன்றுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நலன்பெறுனர்களுக்கு நாற்றுக்கள் ஒப்படைக்கப்பட்டன என்பதற்கு அந்த வசதியாளர்களின் வழியாக அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளில் கையெழுத்துப் பதிவேடு பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் 2012 யூன் 10 ஆந் திகதிய 2/2012 ஆம் இலக்க திவிநெகும சுற்றுநிருபத்தின் 4 ஆவது பந்தியின் பிரகாரம் வீட்டு மட்டத்தில் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக வீட்டுப் பிரிவு அறிக்கை புத்தகமும் சுற்றுநிருபத்தின் 6 ஆவது பந்தியின் பிரகாரம் வசதியாளர்களால்

பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமைக்கான சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2½ ஏக்கர்களில் தென்னங் கன்றுகளைப் பயிரிடும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 65,625 செலவு செய்து 875 தென்னங்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. வணிகப் பயிரின் கழ் 2½ ஏக்கரில் தென்னை பயிரிடுவதற்காக 05 நலன்பெறுனர்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய தென்னங்கள்றுகள் 76 நலன்பெறுனர்களுக்கு 10 படியாகவும் 05 பேருக்கு 20 படியாகவும் ஒரு நலன்பெறுனருக்கு 15 படியாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(iii) 2012 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மஹியங்கனை வீதியின் 01 ஆம் மைலுக்கு அருகில் விவசாய செயற்திட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2012 நவம்பர் 21 ஆந் திகதி ரூபா 24,500 செலுத்தி ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து 8 அடி நீளமான 14 எஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2013 மார்ச் 19 ஆந் திகதிய பரிசோதனையின் போது எஸ்பொஸ்டஸ் கூரைத் தகடுகள் கட்டிடங்களில் பொருத்தப்படாதிருந்ததுடன் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுகின்ற காணியிலும் கூரைத் தகடுகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மெதகம பிரதேச செயலகம்

(i) 2011 திவிநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலனாளிகளிற்கு வழங்குவதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி 500 மாங்கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 75,000 பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டிருந்தன. திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது இப்பணம் 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டன.

(ii) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 63,900 தொகையான 105 தச்சு வேலை உபகரணங்களும் விளையாட்டு உபகரணங்களும் கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 07 ஆந் திகதி வரை உரிய நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படாது பிரதேச செயலக அலுவலகத்தில் பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஏற்பாடுகளின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த கொடபோவ நீர்த் திட்டத்தை திருத்தம் செய்யும் நடவடிக்கைக்காக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில்

ரூபா 531,552 செலவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் வேலையைப் பூர்த்தி செய்வதற்காக 2012 ஆம் ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஜாதிக சவிய கமநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,000,000 தொகையான நிதி ஏற்பாடு ஊவா மாகாண சபைக்கான நிதி ஏற்பாடுகளின் அடிப்படையில் ரூபா 670,000 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 07 ஆந் திகதி வரை செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மடுல்ல பிரதேச செயலகம்

(i) திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வீட்டுத் தோட்டத்திற்காக 2012 ஆகஸ்ட் 29 ஆந் திகதி கொள்வனவுத் தீர்மானத்தின் பிரகாரம் ஒட்டு தோடங்கன்று மற்றும் ஒட்டு மாங்கன்று ரூபா 149.50 வீதம் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஒக்டோபர் 11 ஆந் திகதி நாற்றுமேடையாளரின் தனிப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் ஒரு தோடங்கன்று ரூபா 180 வீதம் 1900 தோடங்கன்றுகளும் ஒரு ஒட்டு மாங்கன்று ரூபா 160 வீதம் 1900 மாங்கன்றுகளும் கொள்வனவு செய்வதற்காக ரூபா 77,900 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திவிநெகும தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1900 மனைப் பிரிவுகளுக்காக 6 வகையான நாற்றுக்களில் 13,302 நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்காக நாற்று மேடையாளர்களுக்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 378,650 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 சனவரி 31 ஆந் திகதி வரை நாற்றுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சியம்பலாண்டுவ பிரதேச செயலகம்

(i) 2012 யூலை 10 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க திவிநெகும சுற்றுநிருபத்தின் 05.01.5 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் தமது தோட்டங்களில் தென்னங்கன்றுகளை நடுவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்தைக் கொண்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கப்பட்டவாறு கிடங்குகள் வெட்டி தோட்டத்தை ஆயத்தப்படுத்தப்படாதிருந்த புத்தம பிரிவின் ஒரு உத்தியோகத்தரிற்கு 64 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதியான 2013 மார்ச் 13 ஆந் திகதி வரை நலன்பெறுனர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 59 தென்னங்கன்றுகள் நடப்பட்டிருக்கவில்லை. திவிநெகும சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு நாற்றும் சிறப்பாக நடப்பட்டமைக்கு

உத்தியோகத்தர்களால் நில மட்டம் நிரந்தரமாக மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மஹகலுகொல்ல விகாரையில் தஹம் பாடசாலை கட்டிடத்திற்காக அஸ்பெஸ்டஸ் தகடுகளை வழங்குவதற்காக 2012 திசெம்பர் 21 ஆந் திகதி ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 100,000 தொகைக்குரிய எஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் 2013 ஆகஸ்ட் 12 ஆந் திகதி வரை அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) படல்கும்புற பிரதேச செயலகம்

------------------------------------------------------

(i) படல்கும்புற பிரிவில் அம்பவத்தை வீதியை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான இடத்தை கொங்கிறீட் இடும் வேலை 2012 மே 30 ஆந் திகதி ரூபா 980,000 மதிப்பிடப்பட்ட தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டு கணக்காய்வுத் திகதிய 2013 மார்ச் 25 ஆந் திகதி வரை ஒப்பந்தகார சங்கத்திற்கு ரூபா 980,000 செலுத்தப்பட்டிருந்தது. 2013 மார்ச் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது வீதியின் இரண்டு இடங்களில் முறையே 15 மற்றும் 13½ மீற்றர்கள் அளவிலான சீமெந்துக் கலவை கழன்று கொங்கிறீட் கல் வெளியாகியிருந்தது.

(ii) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2½ ஏக்கர்களுக்காக 05 நலன்பெறுனர்களுக்கு 175 தென்னங்கன்றுகள் வீதம் வழங்குவதற்கு ரூபா 65,625 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2012 யூலை 10 ஆந் திகதி 2/2012 ஆம இலக்க திவிநெகும சுற்றுநிருபத்தின் 05.01.05 ஆம் பந்தியின் பிரகாரம் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சு இல்லாமல் 175 தென்னங்கன்றுகளை 2013 மார்ச் 20 ஆந் திகதி வரை உரிய முறையில் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1240 கோழிக்குஞ்சுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 434,000 செலவுசெய்யப்பட்டிருந்ததுடன் கட்டுகஹகல்கே பிரிவிலுள்ள 12 நலன்பெறுனர்களுக்கு 10 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டிருந்தன. 2013 மார்ச் 25 ஆந் திகதிய தெரிவுப் பரிசோதனையில் 10 நலன்பெறுனர்களும் கோழிவளர்ப்பு நடவடிக்கைகளிலிருந்து நீங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

* இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

சமுர்த்தி வாழ்வாதார சுழற்சி கடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 ஆம் ஆண்டிலிருந்த 2011 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த கடன் தொகைகளிலிருந்து 6 பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட ரூபா 9,019,593 தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

| **பிரதேச செயலகம்** | **காலப்பகுதி** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி** |
|---|---|---|
| | | ரூபா |
| பிபிலை | 2007-2010 | 2,856,301 |
| மடுல்ல | 2007-2011 | 1,444,547 |
| படல்கும்புற | | 2,146,675 |
| தனமல்வில | | 583,701 |
| செவனகல | | 1,328,177 |
| கதிர்காமம் | | 660,192 |
| | | 9,019,593 |

* தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

தனமல்வில பிரதேச செயலகம்

விதாதா வள நிலையத்தினைப் பேணுவதற்காக வாடகைக்குப் பெற்றுக்கொண்ட கட்டிடத்திற்காக 2009 மே மாதத்திலிருந்த 2012 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 315,000 செலுத்தப்பட்டிருந்த வாடகையை மதிப்பிட்ட அடிப்படை கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

27701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானவை** | **உச்ச எல்லை** | **உள்ளபடியானவை** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 35,000,000 | 34,324,370 | 23,000,000 | 33,186,943 | 145,000,000 | 102,577,331 |

27701 ஆம் இலக்க செலவு விடய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்க கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,523,232 ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ஈ) பொதுவைப்புக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுவைப்புக் கணக்கின் மீதி ரூபா 102,344,349 ஆக இருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 995,334 தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 8,532,736 தொகை தொடர்பான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதும் நிறைவேற்றியதன் பின்னரும் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களிப்புப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.6.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து அடுத்துவரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மேலே பந்தி 1.6.1 இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க மாவட்ட செயலகத்தினால் தயாரிக்கப்படவேண்டிய மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.4 உள்ளகக் கணக்காய்வு**

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகங்களினதும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக போதிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.6.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைச் செயற்படுத்துதல்**

2000 யூன் 12 ஆந் திகதிய 1A1/2000/1 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒரு தடவை நடைபெறவேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 2012 ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் மாத்திரம் நடைபெற்றிருந்தன.

**1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(i) மடுல்ல பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லம் 2010 செப்தெம்பரிலிருந்தும் ஜனபத உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லமும் தல்கொல நிலையக் கட்டிடமும் 2009 ஒக்டோபர் மாதத்திலிருந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மெதகம பிரதேச செயலகத்தின் தட்டெழுத்து இயந்திரம் 7 ஆண்டுகளாகவும் சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்தின் ஒரு ஜீப் வண்டி, ஒரு உழவு இயந்திரமும் இழுவைப் பெட்டியும் என்பன 8 ஆண்டுகளாகவும் கெப் வாகனம் 11 ஆண்டுகளாகவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

பிபில பிரதேச செயலகத்தினால் 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/ மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட்டு அந்த அறிக்கை 2013 மே 30 ஆந் வரையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கடைசியாக 2011 ஆம் ஆண்டிற்கே பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருந்தது.

## 1.8 இணக்கமின்மை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) தாபனவிதிக் கோவை | (ரூபா) | |
| VII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவு | 51,265 | விடுமுறை தினக் கொடுப்பனவுப் பெற்றுக்கொள்வதற்காக 8 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் சேவையாற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்படாது 03 உத்தியோகத்தர்களுக்கு 20 |

| | |
|---|---|
| | சந்தர்ப்பங்களில் விடுமுறை தினக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) திறைசேரி சுற்றுநிருபம்<br>2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | பிபல, மெதகம, கதிர்காமம் ஆகிய பிரதேச செயலகங்களின் கணனி மென்பொருட்களும் துணைக்கருவிகளும் சம்பந்தமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**1.9 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்**

**செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்**

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் |
|---|---|---|---|
| | ரூபா | | |
| சியம்பலாண்டுவ கிணறு தோண்டுதல் | 20,000 | 2012 நவம்பர் 17 ஆந் திகதி | உரிய நலன்பெறுனர் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிணற்றை தோண்டி சுத்தம் செய்யாமை |
| படல்கும்புற கதிரேசன் ஆலயக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 40,700 | 2012 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் | இந்து சமய காரணத்தின் அடிப்படையில் சுபநேரம் பொருந்தாமை. |
| பேரகெடிய வீதிக்கு கொங்கிறீட் இடல் | 1,074,737 | 2012 யூன் 25 | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| வலஸ்கெம குளத்து வீதியின் மதகினையும் நீர் வழிந்தோடியையும் நிர்மாணித்தல் | 1,006,829 | 2012 யூலை 05 | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| பளுபிடிய குளத்தை புனரமைத்தல் | 1,059,820 | 2012 மே 30 | செயற்திட்டத்தின் வேலையை பூர்த்திசெய்வதற்கு முன்னர் ஏற்பட்ட அதிக மழையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட வேலையில் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒரு பகுதி அதிக அளவில் சேதமடைந்தமை |
| தெலல்ல விகாரையைச் சுற்றியுள்ள கால்வாயை புனரமைத்தல் | 1,050,626 | 2012 யூன் 25 | செயற்திட்டத்தின் வேலையை பூர்த்திசெய்வதற்கு முன்னர் ஏற்பட்ட அதிக மழையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட வேலையில் ஒரு பகுதி அதிக அளவில் சேதமடைந்தமை |

## 1.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

### (அ) கொள்வனவு வழிகாட்டியின் நடைமுறைகளை மீறல்

(i) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4.1 ஆம் வழிகாட்டி மற்றும் கொள்வனவு நடவடிக்கை வழிகாட்டியின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச கொள்வனவு குழுவிற்கு சந்தை விலை கோரும் முறைமையின் கீழ் கொள்வனவு செய்யக்கூடிய உச்ச எல்லை ரூபா 500,000 இனை மிகைத்து 3 பிரதேச செயலகங்களின் மூலம் நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| பிரதேச செயலகம் | கொள்வனவு தீர்மானத் திகதி | கொள்வனவு செய்த நாற்றுக்களின் பெறுமதி |
|---|---|---|
| | | ரூபா |
| பிபில | 2012-12-12 | 1,053,858 |
| சியம்பலாண்டுவ | 2012-08-15 | 2,374,862 |
| படல்கும்புற | 2012-09-17 | 840,500 |

(ii) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிபில பிரதேச செயலகத்தின் மூலம் 118 மண்வெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2012 திசெம்பர் 05 ஆந் திகதிய 27 ஆம் இலக்க கொள்வனவுக் குழு தீர்மானத்தின் மூலம் ஒரு மண்வெட்டி ரூபா 750 வீதம் கொள்வனவு

செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு ரூபா 850 வீதம் கொள்வனவு செய்ததன் காரணமாக ரூபா 11,800 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், ஒரு மாதத்திற்கு பயன்படுத்தக்கூடிய உச்ச அளவு எரிபொருள் எல்லையை மிகைத்து அங்கீகாரமின்றி 4 பிரதேச செயலங்களின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக ரூபா 213,608 பெறுமதியான 1878 லீற்றர் எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**(இ) ஏனையவை**

(i) மாவட்ட செயலகம் மற்றும் 4 பிரதேச செயலகங்களின் 06 வாகனங்கள் தொடர்பாக ஓடியுள்ள துாரமும் பயன்படுத்திய எரிபொருளுக்கான செலவுகளையும் ஒப்பீடு செய்த போது தேவையான அளவினை விட ரூபா 158,079 பெறுமதியான 1310 லீற்றர் எரிபொருட்கள் பெற்றுக்கொள்ளாப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 2011 மார்ச் 31 ஆந் திகதிய எச்ஏஎப்/2/19/எம்ஜீரீசீஎம்/15/1907 ஆம் இலக்க கடிதத்தின் 3 ஆவது பந்தியின் பிரகாரம் பதில் கடமையாற்றும் உச்ச அளவு காலம் 03 மாதங்களை மிகைத்து தனமல்வில பிரதேச செயலகத்தின் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவியில் பதிற்கடமையாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் பதிற்கடமையாற்றுவதற்காக 2010 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2012 நவம்பர் 30 ஆந் திகதி வரை 2 ஆண்டும் 4 மாத காலத்திற்காகவும் ரூபா 113,932 தொகையான பதிற்கடமை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) தாபனவிதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் உப பிரிவிற்கு முரணாக நான்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் ஐந்து நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு பதிற்கடமை/ கடமைகளை நிறைவேற்றும் படி ரூபா 489,714 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**1.12 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) மடுல்ல பிரதேச செயலகத்தின் கணக்காளருக்கு மொனறாகலை அரசாங்க வைத்தியசாலையில் கணக்காளர் பதவியில் கடமையாற்றுவதற்காக 2012 ஏப்ரல் மாதத்தில் 8 நாட்களும் மே மாதத்தில் 07 நாட்களும் யூன் மாதத்தில் 6 நாட்களும் ஆக 21 நாட்களுக்கு மடுல்ல பிரதேச செயலகம் மற்றும் மொனறாகலை வைத்தியசாலை ஆகிய இரண்டு நிறுவனங்களிலும் ஒரே திகதியில் ரூபா 9,250 வீதம் இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கதிர்காமம் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 02 வாகனங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 19,733 பெறுமதியான 171 லிற்றர் எரிபொருட்களும் ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**1.13 நட்டம்**

பல ஆண்டுகளாக ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ 7 படிவத்தில் காட்டப்பட்டிருந்த 07 பிரதேச செயலகங்களுக்குரிய 11 வாகன விபத்துக்கள் சம்பந்தமான நட்டங்களின் ரூபா 4,038,402 கூட்டுமொத்தம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.14 முகாமைத்துவ பலவீனம்**

(அ) 2012 ஏப்ரல் 26 ஆந் திகதி அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் ரதலியத்த சேவை இல்லத்திற்காக பிபில பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒரு கணனி, கணனி துணைக்கருவிகள், கணனி மேசை, கணனி கதிரை என்பன 2013 மார்ச் 20 ஆந் திகதி வரை உரிய செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பிபில பிரதேச செயலகத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 269,940 பெறுமதியான உபகரணங்கள் 2013 மார்ச் 20 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மெதகம பிரதேச செயலகத்தின் மூலம் 2010 ஆம் ஆண்டின் போது அரசாங்க நிருவாக அமைச்சின் ரூபா 500,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் திம்பிரிய சேவை இல்லத்திற்காக 2011 ஆகஸ்ட் 29 ஆந் திகதி மாவட்ட செயலகத்தினால் வழங்கப்பட்ட

06 கணனிகளும் துணைப்பொருட்களும் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டன.

(ஈ) செவனகல பிரதேச செயலகத்தின் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2012 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 43 கிரிக்கட் மட்டைகளும் 21 டின் டென்னிஸ் பந்துகளும் பகிர்ந்தளிக்கப்படாது 2013 செப்தெம்பர் 06 ஆந் திகதி வரை அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) சியம்பலாண்டுவ பிரதேச செயலகத்தின் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 9x9 அளவான 182 மண்வெட்டிகள், 500 லீற்றர் நீர்த்தாங்கி ஒன்று 08 கரப்பந்துகள், 01 கூடைப்பந்து, 2 உருவச் சிலைகள் வைக்கும் சாதனம், 56 பிலாஸ்ரிக் கதிரைகள் என்பன 2013 மார்ச் 12 ஆந் திகதி வரை நலன்பெறுனர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது பிரதேச செயலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) தனமல்வில பிரதேச செயலகத்தின் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குடும்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 இலிருந்து 2011 வரையான ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 358 விளையாட்டுப் பொருட்களும் நானாவித உபகரணங்களும் 2012 திசெம்பர் 12 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கதிர்காமம் பிரதேச செயலகத்தின் மூலம் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 110 பிளாஸ்ரிக் சிறுவர் கதிரைகள் 03 பிளாஸ்ரிக் சிறுவர் மேசைகள், 136 பெரிய பிளஸ்ரிக் நாற்காலிகள் மற்றும் 03 டெனிஸ் பந்துகள் என்பன 2013 சனவரி 29 ஆந் திகதி வரையும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வெல்லவாய பிரதேச செயலகத்தின் மூலம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்வேறு தொண்டர் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட 239 வகையான பொருட்களை கணக்காய்வுத் திகதியான 2012 திசெம்பர் 15 ஆந் திகதி வரை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2010 ஒக்டோபர் 07 ஆந் திகதி ரூபா 467,500 செலவு செய்து மாவட்ட செயலகத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ மென்பொருள் முறைமை செயற்படும் நிலையில் காணப்படவில்லை. கொள்வனவு செய்வதற்கு

முன்னர் இந்த முறைமையைப் பயன்படுத்தும் முறைமை தொடர்பாக எதுவித வசதிகளும் வழங்கப்படாதிருந்ததுடன் முறைமைக்குரிய கையேடும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 13.1 ஆம் பிரிவின் பிரகாரம் வாடகை அறவிடப்பட வேண்டிய 03 பிரதேச செயலகங்களின் பட்டியல்படுத்தப்பட்ட 4 வீடுகளிலிருந்து தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பிரிவு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் ABK/C/7/பொது ஆம் இலக்க 2003 ஏப்ரல் 11 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது பொருளாதார வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ஓ) மூன்று பிரதேச செயலகங்களின் 6 அரசாங்க இல்லங்களிலிருந்து அறவிடப்படும் பொருளாதார வாடகை உரிய காலப்பகுதியின் இறுதியில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) பிபில பிரதேச செயலக கட்டிடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ள v ஆவது தர உத்தியோகபூர்வ இல்லம் 1997 ஆம் ஆண்டிலிருந்து சமூகசேவை உத்தியோகத்தர் வசிப்பதற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2013 மார்ச் 14 ஆந் திகதி வரை எவரும் குடியிருக்காத போதிலும் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவின் பிரகாரம் குடியிருக்கும் உத்தியோகத்தர்களால் நீர்ப் பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது 1997 ஆம் ஆண்டிலிருந்து குடியிருக்கும் உத்தியோகத்தர்களால் அலுவலக நீர் வழங்கல்களிலிருந்து நீர் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 1.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவயணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 40 | 33 | 07 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 24 | 4 | 20 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 653 | 524 | 129 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 109 | 99 | 10 |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | ஏனையேர் (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - |
| | | ------------ | --------------- | -------------- |
| | மொத்தம் | 826 | 663 | 166 |
| | | ===== | ====== | ===== |

(ஆ) 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றுநிருபத்தின் பிரகாரம், உச்ச கால எல்லையாகிய 05 ஆண்டுகள் ஒரே பதவியில்/ சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள மாவட்ட செயலகம் மற்றும் பிபில பிரதேச செயலகத்தில் சேவையாற்றும் 41 உத்தியோகத்தர்களுக்கு ஏனைய பதவிகளில்/ சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் 880 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 1993 ஒக்டோபர் 07 ஆந் திகதிய உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் ஈ/2/பிணை ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் பொருட்கள் மற்றும் நிதிக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் காசோலைகளில் கையெழுத்திடும் 05 பிரதேச செயலகங்களின் 41 உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய முறைப்படி ரூபா 442,500 தொகையான பாதுகாப்பு பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 880 மற்றும் பொது நிருவாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 1991 செப்தெம்பர் 09 ஆந் திகதிய ஈ/2/30(1) ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 03 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 75 கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 75,000 பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை.